Underground drainage schemes

***498. *Q.*—Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—**

(*a*) whether underground drainage scheme has not been fully implemented in Salem Municipality ;

(*b*) the estimated cost of the scheme ; and

(*c*) when it would be completed ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இதுவரை திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்படவில்லை.

(இ) and (உ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. கே. விநாயகம் : சேலம் நகரத்திலே அண்டர்கிரவுண்ட் ட்ரெயினேஜ் சிஸ்டத்திற்காக இதுவரையிலும் அனுமதி கொடுக்காததற்கு ஏதாவது காரணம் இருக்கிறதா ? அரசாங்கம் அதைப் பரிசீலித்து உடனடியாக நிறைவேற்றுவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : சேலத்திற்கு ஒரு சாக்கடை வடிகால் திட்டம் ஏற்படுத்த 1920-லே 16 லட்ச ரூபாய்க்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. அப்போதிருந்த நிலையில் அது செய்ய முடியாது என்று கருதி, 5,70,000 ரூபாய் செலவில் ஒரு சிறிய திட்டம் போடப்பட்டு படிப்படியாக அதைச் செய்து முடித்தார்கள். ஆனால், பாதாள சாக்கடை கட்ட வேண்டுமென்ற முடிவு 1963-ஆம் ஆண்டிலே சீப் என்ஜினீயர் (என்ஜினீயரிங் அன்டு முனிசிபல் ஒர்க்ஸ்) சொல்லி 92,62,000 ரூபாய் செலவிலே செய்ய வேண்டுமென்று முடிவு எடுத்தார்கள். அதற்காக 28,500 ரூபாய் அடிப்படையான ஆரம்ப பூர்வாங்க வேலைகளுக்காக, ஆராய்ச்சிக்காக ஒதுக்கி அரசாங்கம் ஒப்புதல் அளித்திருக்கிறது. அதற்குப் பிறகு திருமணிமுத்தாறு என்ற ஆறு சேலம் நகரத்திற்கு இடையிலே ஓடுகின்ற காரணத்தாலே கழிவுநீர் கலக்கிறது. அதனால் தண்ணீர் அசுத்தப்பட்டு விடுகிறது. எனவே, கழிவுநீருக்காகத் தனியாக வடிகால் ஏற்படுத்த வேண்டும் என்ற அளவிலே திருமணிமுத்தாறுக்கு இரு கரைகளிலும் சுவர்கள் எழுப்பி அந்தக் கழிவு நீரைக் கொண்டுபோய் விவசாயத்திற்குப் பயன்படுத்தக் கூடிய முறையில் அந்த முனிசிபல் கமிஷனர் கேட்டிருக்கிறார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இந்தக் கழிவு நீரை ஸுவேஜ் பார்ம்-க்குக் கொண்டுபோய் மீண்டும் அதை விவசாயத்திற்கு உபயோகப்படுத்தக் கூடிய முறையில் செய்யலாம் என்று யோசிக்கப்பட்டது. மத்திய அரசாங்கம் 12½ சத வீதம் இதற்காக உதவி கொடுக்கிற காரணத்தாலே கழிவு நீரைக் கொண்டுபோய் விவசாயத்திற்குப் பயன்படுத்தக்கூடிய காரணத்தாலும் புதிய முறையிலே திருமணிமுத்தாறு கரைகளில் சுவர்கள் கட்டுவதற்காக 3 கோடியே 35 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படிச் செய்யப்பட்டால் 3 லட்ச ரூபாய் ஆண்டொன்றுக்கு அதைப் பராமரிப்பதற்காக முனிசிபாலிடிக்குச் செலவாகக் கூடிய நிலைமையும் இருக்கிறது. எனவே அந்த நகராட்சி வருஷத்திற்கு 3 லட்ச ரூபாய் செலவழிக்கக்கூடிய நிலையில் ஒப்புதல் தந்தால் செய்யலாமென்று அரசாங்கம் கருதுகிறது. ஆனால் அந்த நகராட்சியிடமிருந்து எந்த விதமான தகவலும் இல்லை.

***499 *Q.*—Thiru N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state the details of the underground drainage scheme sanctioned for Alandur and its neighbourhood ?**

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆலந்தூர் நகரத்துக்கு வடிகால் திட்டத்திற்கான ஒப்புதல் அரசு அளிக்கவில்லை. ஆனால், இத் திட்டத்திற்கான புலனாய்வுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்தத் திட்டத்திற்கு மொத்த மதிப்பீடு எவ்வளவு ஆகும் என்று அறிவிப்பீர்களா ?

1969 மார்ச் 27]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : 1963-லே அரசாங்கம் 9 லட்சத்து 11 ஆயிரத்திற்குத் திட்டம் கொடுத்தது. பொதுவாக ஆலந்தூர் பஞ்சாயத்து சிறிய அளவிலே அப்பொழுது இருந்தது. ஆனால் இப்பொழுது ஆதம்பாக்கம், பவளந்தாங்கல், நங்கநல்லூர் போன்றவையும் சேர்ந்துவிட்ட பிறகு அதைப் பெரிய திட்டமாக்க வேண்டுமென்ற அளவிலே அதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்ற நிலையில் அதற்காக ஆய்விற்காக 31,810 ரூபாய் செலவை அரசாங்கம் ஒப்புக்கொண்டிருக்கிறது. 1965-க்குப் பிறகு அது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சாக்கடைத் திட்டங்களுக்காக 12 கோடியே 50 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தாலும் கூட 1 கோடி ரூபாய்தான் புதிய திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் புதிய திட்டங்களிலே ஆலந்தூரும் சேர்க்கப்பட்டிருக்கிறது. எனவே, அதுவும் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு கே. விநாயகம் : ஆலந்தூர் முனிசிபாலிடி சென்னைக்கு அருகாமையில் இருப்பது மன்றி அண்டர் கிரவுண்ட் டிரெய்னேஜ் இல்லாததால் கழிவு நீர் எல்லாம் அங்கே ஊறி சுற்றுப்புறத்தில் இருக்கும் கிணற்றுத் தண்ணீர் கெட்டுப்போய் குடிக்க முடியாத அளவுக்கு (not portable water) இருக்கிறது. அதனால் பல நோய்கள் பரவுவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, அதற்கு உடனடியாகப் பரிகாரம் தேட இந்த ஆண்டே அதைச் சேர்த்துக்கொள்ள ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அதைத்தான் நான் சொன்னேன். இந்த ஆண்டு ஆலந்தூர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

* 500 **வினா.—திரு. ரா. சௌந்தர பாண்டியன் :** மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கரூர் நகரத்திற்கு பாதாள சாக்கடை அமைக்க வேண்டும் என கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வந்தது ? அது தற்போது எந்நிலைமையில் இருந்து வருகிறது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) கரூர் நகருக்கு பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கவேண்டும் என்று கோரி அந்நகராட்சி திருச்சி மாவட்ட ஆட்சியாளருக்கு 1955-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் விண்ணப்பம் செய்தது.

(இ) கரூர் நகர சாக்கடைத் திட்டத்திற்கு அரசினர் ஒப்புதல் அளிக்கவில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அது அரசுக்கு எப்போது வந்தது ? அது எந்த நிலைமையில் இருக்கிறது ? இனியாவது கரூர் சாக்கடைத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : 1955-ம் ஆண்டில் நகராட்சியினர் அரசாங்கத்துக்கு விண்ணப்பித்தார்கள். பிறகு மனு என்ன ஆனது என்று தெரியவில்லை. இந்த முறை அரசாங்கமே பரிசீலனை செய்யும்போது கரூர் திட்டத்தை ஏற்றுக் கொள்ளுவதாக முடிவு எடுக்கவில்லை. காஞ்சிபுரம், சேலம், திருச்சிராப்பள்ளி, ஆலந்தூர் ஆகிய இடங்களில்தான் இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளவதாகத் திட்டம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]